www.prepp.in

prepp
Your Personal Exams Guide

**UPSC CSE 2018 MAINS PAPER 7 OCTOBER 07, 2018 TAMIL LITERATURE OPTIONAL PAPER - II QUESTION PAPER**

# தமிழ்

## தாள்—II

(இலக்கியம்)

காலஅளவு : மூன்று மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள் : 250

### வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்

**வினாக்களுக்கு விடை எழுதத் தொடங்கும் முன் பின்வரும் அறிவுறுத்தல் ஒவ்வொன்றையும் கவனமாகப் படிக்கவும்:**

இரண்டு பிரிவுகளாகப் பகுத்து மொத்தத்தில் எட்டு வினாக்கள் தரப்பட்டுள்ளன.

அவற்றுள் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும்.

1, 5 ஆகிய வினாக்களுக்குக் கட்டாயம் விடையளிக்க வேண்டும்; எஞ்சிய வினாக்களுள் பகுதி ஒவ்வொன்றிலும் குறைந்தது ஒரு வினாவைத் தெரிவு செய்து விடையளிக்க வேண்டும். இரண்டு பகுதிகளிலும் சேர்ந்து மொத்தத்தில் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும்.

ஒவ்வொரு வினா மற்றும் பகுதிகளுக்குரிய மதிப்பெண்கள் அவற்றுக்கு நேரே கொடுக்கப்பட்டுள்ளன.

விடைகளைக் கட்டாயம் தமிழில் மட்டுமே எழுத வேண்டும்.

வினாக்களுக்கு நேரே கொடுக்கப்பட்டுள்ள விடைதரும் சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

விடையளிக்கப்பட்ட வினாக்கள் வரிசை முறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதி மட்டும் விடை எழுதப்பட்ட நிலையில் எஞ்சிய பகுதி அடிக்கப்படாமல் இருந்தால் அப்பகுதியிலிருந்தும் அடிக்கப்படாத பக்கமும் விடைப் பக்கமாகக் கருதிக் கணக்கிடப்படும். ஆகவே வினா-விடைப் புத்தகத்தில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதிகளைத் தெளிவாக அடித்துவிட வேண்டும்.

# TAMIL

## PAPER—II

( LITERATURE )

Time Allowed : Three Hours | Maximum Marks : 250

### QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

**Please read each of the following instructions carefully before attempting questions**

There are EIGHT questions divided in two Sections.

Candidate has to attempt FIVE questions in all.

Question Nos. 1 and 5 are compulsory and out of the remaining, THREE are to be attempted choosing at least ONE question from each Section.

The number of marks carried by a question/part is indicated against it.

Answers must be written in TAMIL.

Word limit in questions, wherever specified, should be adhered to.

Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.

www.prepp.in

## SECTION—A

1. கீழ்க் காணும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : 10×5=50

(a) குறுந்தொகையில் காணப்படும் தோழிக் கூற்றுப்பாடல்களின் தனிச் சிறப்பினைத் தெளிவுபடுத்துக.

(b) "தமக்கென முயலா நோன்தாள் பிறர்க்கென முயலுநர் உண்மையானே" – இப்பாடல் உணர்த்தும் பண்பாட்டுப் பேருண்மையைப் புலப்படுத்துக.

(c) '[illegible]' என்னும் அதிகாரத்தின் வழிக் குறளாசான் உணர்த்துமவற்றைக் குறிப்பிடுக.

(d) சிலப்பதிகாரப் பெருங்காப்பியத்தில் இடம்பெறும் வழக்குரை காதையின் தனித்தன்மையைக் கூறுக.

(e) திருப்பாவையில் காணப்படும் திருமாலின் தனிச் சிறப்புகளை எடுத்துக் கூறுக.

2. கீழ் வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :

(a) வீடணனின் பண்புநலன்களை விளக்குக. 20

(b) நாவொடு தலைவிக்கு உள்ள நட்பை தேவகுலத்தார் எவ்வாறு வருணிக்கிறார்? 15

(c) தெய்வப்புலவர் உணர்த்தும் 'கல்வி'யின் அருமை பெருமைகளை எடுத்துக் காட்டுக. 15

3. கீழ் வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :

(a) சிலப்பதிகாரப் 'புறஞ்சேரியிறுத்த காதை' பெருங்காப்பியக் கதைப் போக்கிற்கு உதவும் பான்மையினை விளக்கியுரைக்க. 20

(b) நன்றி ததும்பும் பாத்திரமாகக் கும்பகருணன் படைக்கப்பட்டுள்ளமையைச் சான்று வழி நிறுவுக. 15

(c) மணிவாசகப் பெருமான் தன் அவலநிலையினை "நீத்தல் விண்ணப்பத்தில்" வெளிப்படுத்து மாற்றைத் தெரிவிக்க. 15

4. கீழ்வரும் பாடற்பகுதிகள் பயிலும் இடத்தையும், அவற்றின் இலக்கிய நயத்தையும் வெளிப்படுத்துக.

(a) "காமம் செப்பாது கண்டது மொழிமோ". 20

(b) "மை இட்டு எழுதோம் மலர் இட்டு நாம் முடியோம் செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்று ஓதோம்". 15

(c) "கற்புக்கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்". 15

www.prepp.in
Prepp
Your Personal Exams Guide

## SECTION - B

5. கீழ்க் காணும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : 10×5=50

(a) கண்ணம்மாவைக் குழந்தையாகக் காணும் மகாகவி பாரதியின் தாய்மை உள்ளத்தைப் புலப்படுத்துக.

(b) 'குடும்ப விளக்கில்' புரட்சிக்கவிஞர் 'முதியோர் காதலின்' சிறப்பை எவ்வாறு பாடுகின்றார்?

(c) 'கறுப்பு மலர்கள்' தமிழ்க் கவிதை உலகின் ஒரு திருப்புமுனை என்பதை விளக்குக.

(d) இன்றைய சமூக அவலங்களை மு.வ. எங்ஙனம் வெளிப்படுத்துகின்றார்?

(e) 'சித்திரப்பாவையில்' வரும் அண்ணாமலையின் பண்பு நலன்கள் யாவை?

6. கீழ் வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :

(a) நல்ல சிறுகதைக்குச் சான்றாக "தவறுகள் குற்றங்கள் அல்ல" திகழ்வதை விவரிக்க. 20

(b) நாடக ஆசிரியர் 'சோ'வின் சமுதாயக் கண்ணோட்டத்தைக் குறிப்பிடுக. 15

(c) முத்துப்பட்டன் பாத்திரப்படைப்பு தெரிவிக்கும் செய்திகள் யாவை? 15

7. கீழ் வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :

(a) பாவேந்தரின் உருவப்படத்தைத் திறந்து வைத்து, அறிஞர் அண்ணா ஆற்றிய பேருரையின் தனிச்சிறப்பை விளக்குக. 20

(b) மு.வ. வின் உரைநடைத் திறனை சான்றுகளுடன் விளக்குக. 15

(c) தொழிலாளர் பாடல்களின் சிறப்பை கி.வா.ஜ. எங்ஙனம் காட்டுகின்றார்? 15

8. கீழ் வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :

(a) உலகியலைப் பாடவல்லவர் பாரதி என்பதை, 'கண்ணன் என் தோழன்' என்ற பாடல்வழி விளக்குக. 20

(b) பாவேந்தர் காண விழையும் சமுதாய மாற்றங்கள் யாவை? 15

(c) மாறி வரும் சமுதாய நடைமுறைகளை அகிலன் எவ்வாறு எடுத்துக் காட்டுகின்றார்? 15

* * *